Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | :CC No. 919/2025 |
| Police station | : Cuddalore PE Wing |
| Deposition of witness for Prosecution | : LW 1 /PW1 |
| Name | : சிலம்பரசன் |
| Father Name/Husband Name | : அஞ்சாபுலி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.07.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar,B.A,L.L.B,(Hons),L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**சாட்சி கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையம் தலைமை காவலர் திரு.ஜெயராஜ் (HC 364) என்பவரால் அடையாளம் காண்ப்பிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். வழக்கு சமயத்தில் பண்ருட்டி மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். நானும் என்னுடன் காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக இருந்த HC 1269 திரு.ராஜேஷ் என்பவரும் மற்றும் கடலூர் மதுவிலக்கு பிரிவு காவல ஆயவாளர் திரு.பாலஜி என்பவரும் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் அருகே கடந்த 02.05.2025 அன்று மாலை 16.00 மணியளவில் மதுவிலக்கு சம்மந்தமாக சோதனையில் இருந்த போது அந்த வழியாக கையில் கட்டப்பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணாக பேசியனார். பிறகு அவர் தனது பெயர் பாபு (54) த.பெ சுந்தரமூர்த்தி கணபதி நகர், 2 வது தெரு, கங்கைகொண்டான் நெய்வேலி என்று சொன்னார். பிறகு கட்டப்பையை சோதனை செய்த போது கட்டப்பையில் 1) 180 ml நெப்போலியன் கொரியர் பிரண்டி – 18 Nos 2) 180ml பிஸ்கட் பிராண்டி –32 Nos இருந்தது. அவர் கொண்டு வந்த புதுவை மாநில மதுபானங்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டவை என்பதனால் எவ்வவித உரிமமும் அரசு அனுமதியும் இன்றி எடுத்து வந்து அதை தமிழ் நாட்டில் அதிக விலைக்கு விற்பதற்காக கொண்டு வந்ததாக அவர் கூறினார். பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றியும் எதிரியை தக்க

காரணம் கூறி 16.15 மணிக்கு கைது செய்தும், அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்கள் யாரும் முன்வரததால் மகஜர் சாட்சிகளாக நானும் HC 1269 திரு.ராஜேஷ் என்பவர் முன்னிலையில் 16.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் **( மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவிற்க்கு 17.00 மணிக்கு நிலையம் எதிரியை அழைத்து வந்து நிலைய குற்ற எண் 326/2025 ச/பி 4(1)(A) , 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய நானும் HC 1269 திரு.ராஜேஷ் என்பவரும் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சமயத்தில் நான் பண்ருட்டி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் கடலூர் ஆல்பேட்டை சோதனை சாவடிக்கு பணிக்கு வரவேண்டும் என்றால் பண்ருட்டி மதுவிலக்கு காவல் நிலைய ஆய்வாளர் என்னை பணிநியமன பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு அவரது உத்தரவின் பேரில் தான் நான் ஆல்பேட்டை சோதனை சாவடிக்கு பணிக்கு வரவேண்டும் என்று சொன்னால் சரிதான். பண்ருட்டி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட பணிநியமன பதிவேட்டின் உத்தரவு நகலை கடலூர் மதுவிலக்கு காவல் ஆய்வாளரிடம் நான் வழங்கினேன். இந்த விவரங்களை ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும் போது நான் தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் எத்தனை வாகனங்களை நாங்கள் சோதனை செய்தோம், எத்தனை வழக்குகள் பதிவு செய்தோம் என்றால் 40 வாகனங்களை ஆய்வு செய்தோம், அன்றைய தினம் வழக்கு ஏதும் பதிவு செய்யவில்லை. நான் தற்போது சொன்ன விவரங்களைத்தான் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போதும் நான் கூறினேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி போக்குவரத்து மிகுந்த பகுதி என்று சொன்னால் சரிதான். ம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி தான் என்று சொன்னால் சரிதான். எதிரியை நாங்கள் சோதனை செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் பொதுமக்கள் அங்கு நின்று வேடிக்கை பார்த்தனர். அங்கு நின்று கொண்டிருந்த 4 பொதுமக்களை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அன்றைய தினம் நான் சீருடையில் தான் பணியில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடியில் கடலூர் சாலையை நோக்கியும், புதுவை சாலையை நோக்கியும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கண்காணிப்பு கேமராவின் பதிவேடுகளை ஆய்வாளர் பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும்

கட்டப்பையின் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியின் கைது குறித்து எதிரியின் எந்த உறவினருக்கு காவல் ஆய்வாளர் தகவல் கூறினார் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆய்வாளர் தான் உறவினருக்கு தகவல் சொன்னார். எதிரியிடம் எவ்விதமான வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னாலும் அப்படி உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் எதிரி கொண்டு வந்த கட்டப்பையை பற்றிய விவரங்கள் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று நான் பணியில் இல்லை என்று சொன்னாலும், அப்படி பணியில் இருந்திருந்தால் பணி நியமன பதிவேட்டு நகலை கடலூர் மதுவிலக்கு காவல் ஆய்வாளரிடம் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினம் நான் பணியில் தான் இருந்தேன். GD என்ற பொது நாட்குறிப்பேட்டில் நான் குறிப்பிட்டுள்ளேன். மேற்சொன்ன விவரங்களை நான் ஆய்வாளர் விசாரிக்கும் போதோ அல்லது முதல்விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் ஆய்வாளரிடம் சொன்னேன் நீதிமன்றத்தில் முதல்விசாரணையில் சொல்லவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் அவ்வாறு நடந்திருந்தால் பொதுமக்களை ஆய்வாளர் விசாரித்து இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பார் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

குறுக்கு விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று 40 வாகனங்ளை ஆய்வு செய்தோம் என்றும், எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாகனத்தை சோதனை செய்த போது எந்த வழக்கும் பதிவு செய்யவில்லை, நடந்து வந்தவர் மீது வழக்கு பதிவு செய்தோம். அந்த வழக்கு தான் இந்த வழக்கு தான் என்று சொன்னால் சரிதான்.

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | :CC No. 919/2025 |
| Police station | : Cuddalore PE Wing |
| Deposition of witness for Prosecution | : LW 2 /PW2 |
| Name | : ராஜேஷ் |
| Father Name/Husband Name | : தட்சணாமூர்த்தி |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.07.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar,B.A,L.L.B,(Hons),L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**சாட்சி கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையம் தலைமை காவலர் திரு.ஜெயராஜ் (HC 364) என்பவரால் அடையாளம் காண்ப்பிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மங்களம் பட்டு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். வழக்கு சமயத்தில் கடலூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். நானும் என்னுடன் பண்ருட்டி மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக இருந்த HC 2004 திரு.சிலம்பரசன் என்பவரும் மற்றும் கடலூர் மதுவிலக்கு பிரிவு காவல் ஆயவாளர் திரு.பாலஜி என்பவரும் கடலூர் ஆல்பேட்டை செக்போஸ்ட் அருகே கடந்த 02.05.2025 அன்று மாலை 16.00 மணியளவில் மதுவிலக்கு சம்மந்தமாக சோதனையில் இருந்த போது அந்த வழியாக கையில் கட்டப்பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவரை விசாரித்த போது முன்னுக்குப் பின் முரணாக பேசியனார். பிறகு அவர் தனது பெயர் பாபு (54) த.பெ சுந்தரமூர்த்தி கணபதி நகர், 2 வது தெரு, கங்கைகொண்டான் நெய்வேலி என்று சொன்னார். பிறகு கட்டப்பையை சோதனை செய்த போது கட்டப்பையில் 1) 180 ml நெப்போலியன் கொரியர் பிரண்டி – 18 Nos 2) 180ml பிஸ்கட் பிராண்டி –32 Nos இருந்தது. அவர் கொண்டு வந்த புதுவை மாநில மதுபானங்கள் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டவை என்பதனால் எவ்வவித உரிமமும் அரசு அனுமதியும் இன்றி எடுத்து வந்து அதை தமிழ் நாட்டில் அதிக விலைக்கு விற்பதற்காக கொண்டு வந்ததாக அவர் கூறினார். பின்பு உச்ச நீதிமன்ற கட்டளைகளை பின்பற்றியும் எதிரியை தக்க

காரணம் கூறி 16.15 மணிக்கு கைது செய்தும், அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்கள் யாரும் முன்வரததால் மகஜர் சாட்சிகளாக நானும் HC 2004 திரு.சிலம்பரசன் என்பவர் முன்னிலையில் 16.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் ஆய்வாளர் கைப்பற்றினார், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் சாட்சியாக இருந்து கையொப்பம் இட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான் ( **மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவிற்க்கு 17.00 மணிக்கு நிலையம் எதிரியை அழைத்து வந்து நிலைய குற்ற எண் 326/2025 ச/பி 4(1)(A) , 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய நானும் HC 2004 திரு.சிலம்பரசன் என்பவரும் ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சமயத்தில் நான் கடலூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்தேன் என்று சொன்னால் சரிதான். நான் கடலூர் ஆல்பேட்டை சோதனை சாவடிக்கு பணிக்கு வரவேண்டும் என்றால் காவல் கட்டுப்பாட்டு அறையின் ஆய்வாளர் என்னை பணிநியமன பதிவேட்டில் பதிவு செய்து கொண்டு அவரது உத்தரவின் பேரில் தான் நான் ஆல்பேட்டை சோதனை சாவடிக்கு பணிக்கு வரவேண்டும் என்று சொன்னால் சரிதான். கடலூர் கட்டுப்பாட்டு அறையின் ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட பணிநியமன பதிவேட்டின் உத்தரவு நகலை கடலூர் மதுவிலக்கு காவல் ஆய்வாளரிடம் நான் வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த விவரங்களை ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும் போது நான் தெரிவித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அன்றைய தினம் எத்தனை வாகனங்களை நாங்கள் சோதனை செய்தோம், எத்தனை வழக்குகள் பதிவு செய்தோம் என்றால் 40 முதல் 45 வாகனங்களை ஆய்வு செய்தோம், அன்றைய தினம் 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தது. நான் தற்போது சொன்ன விவரங்களைத்தான் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போதும் நான் கூறினேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி போக்குவரத்து மிகுந்த பகுதி என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடி பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி தான் என்று சொன்னால் சரிதான். எதிரியை நாங்கள் சோதனை செய்ததாக சொல்லப்படும் சமயத்தில் பொதுமக்கள் அங்கு நின்று வேடிக்கை பார்த்தனர். அங்கு நின்று கொண்டிருந்த அந்த பொதுமக்களை காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் இல்லை. அன்றைய தினம் நான் சீருடையில் தான் பணியில் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடியில் கடலூர் சாலையை நோக்கியும், புதுவை சாலையை நோக்கியும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கண்காணிப்பு கேமராவின் பதிவேடுகளை ஆய்வாளர் பார்த்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான்

கையொப்பம் செய்த கைப்பற்றுதல் மகஜரில் எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும் கட்டப்பையின் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும் எந்த கட்டப்பையையும் அவர் கைப்பற்றபடவில்லை என்று சொன்னல் சரிதான். எதிரி கொண்டு வந்ததாக சொல்லப்படும் கட்டப்பையை குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அவர் கொண்டு வந்தது துணி கட்டப்பை . மேற்சொன்ன விவரங்களை காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த கட்டப்பையையும் சேர்த்து தான் காவல் நிலையம் எடுத்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். எதிரியின் கைது குறித்து எதிரியின் எந்த உறவினருக்கு காவல் ஆய்வாளர் தகவல் கூறினார் என்ற விவரம் எனக்கு தெரியாது, ஆய்வாளர் தான் உறவினருக்கு தகவல் சொன்னார். எதிரியிடம் எவ்விதமான வழக்கு சொத்தும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னாலும் அப்படி உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் எதிரி கொண்டு வந்த கட்டப்பையை பற்றிய விவரங்கள் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாள் அன்று நான் பணியில் இல்லை என்று சொன்னாலும், அப்படி பணியில் இருந்திருந்தால் பணி நியமன பதிவேட்டு நகலை கடலூர் மதுவிலக்கு காவல் ஆய்வாளரிடம் கொடுத்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னாலும் அவ்வாறு நடந்திருந்தால் பொதுமக்களை ஆய்வாளர் விசாரித்து இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பார் என்று சொன்னாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | :CC No. 919/2025 |
| Police station | : Cuddalore PE Wing |
| Deposition of witness for Prosecution | : LW3 /PW3 |
| Name | : வெங்கடேசன் |
| Father Name/Husband Name | : வீரப்பன் |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.07.2026 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar,B.A,L.L.B,(Hons),L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**சாட்சி கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையம் தலைமை காவலர் திரு.ஜெயராஜ் (HC 364) என்பவரால் அடையாளம் காண்ப்பிக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுநகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். கடந்த 02.05.2025 ம் வருடம் 21.00 மணிக்கு கடலூர் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, பாபு த.பெ சுந்தரமூர்த்தி எண்.11, 2 வது தெரு, கணபதி நகர், கங்கைகொண்டான் நெய்வேலி என்பவரை ஆல்பேட்டை மதுவிலக்கு சோதனை சாவடியில் இருந்து தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புதுச்சேரி மதுபானங்களை எடுத்து வந்த காரணத்தினால் கைது செய்து கடலூர் மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண் 326/2025 ச.பி 4(1)(A), 4(1)(C ) of TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள். பின்னர் எதிரி எந்தவித அச்சுருத்தலும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் திரு.பாலாஜி என்பவர் பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராத காரணத்தினால் என்னையும் தலைமை காவலர் HC 182 திரு.நவமணி என்பவரையும் சாட்சியா இருக்க கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததற்க்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது.)** அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் மதுபானங்களை கொண்டு வர பயன்படுத்திய TN–31–CQ–5409 டொயோட்டா glanza என்ற வாகனத்தை அவரை அழைத்து சென்றால் அடையாளம் காட்டுவதாக கூறினார். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அந்த வாகனத்தை அன்றைய தினமே 21.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றுவதற்க்கு காவல் ஆய்வாளர் தயார் செய்த கைப்பறறுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் 182 திரு.நவமணி என்பரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான் **(மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் ஆல்பேட்டை சோதனை சாவடியில் பணியில் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியின் கையொப்பம் மற்றும் ஆய்வாளரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பொதுவாக சம்பவம் நடந்த இடத்தில் தான் எதிரியிடம் இருந்து பெறவேண்டும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தான் எதிரியிடம் இருந்து பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான். எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு நான் தான் அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரிதான். எத்தனை மணிக்கு அழைத்து சென்றேன் என்றால் 18.00 மணி அளவில் இருக்கும். மருத்துவ பரிசோதனை முடித்து எத்தனை மணிக்கு நிலையம் திரும்பினேன் என்றால் இரவு 20.30 மணி இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஆல்பேட்டை சோதனை சாவடிக்கும் போக்குவரத்து சோதனை சாவடிக்கும் இடைய உள்ள துாரம் 100 மீ தான் என்று சொன்னால் சரிதான். அந்த போக்குவரத்து சோதனை சாவடியில் மாலை 04.00 மணிக்கு காவலர்கள் பணியில் இருப்பார்களா என்றால் இருக்க மாட்டார்கள். அந்த போக்குவரத்து சோதனை சாவடியில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த போக்குவரத்து சோதனை சாவடியின் கண்காணிப்பு கேமிரா பதிவேட்டுகளை ஆய்வாளர் பார்த்தாரா என்றால் இல்லை. ஆல்பேட்டை சோதனை சாவடியில் இருந்து பார்த்தாலே போக்குவரத்து சோதனை சாவடி தெரியும் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்று சொன்னாலும் எதிரி உங்கள் முனனிலையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இந்த வழக்கில் புகார்தாரர், முதல் தகவல் அறிக்கை, விசாரணை அதிகாரி, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தவர் உங்கள் மேல் அதிகாரிகள் என்பதால் அவர்கள் பதிவு செய்த பொய்யான வழக்கிற்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் உண்மையில் சம்பவம்

நடைபெற்றிருந்தால் எதிரியிடம் இருந்த ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்தில் பெறப்பெற்றிருக்கும் என்று சொன்னாலும் வழக்கு சொத்து சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டிருக்கும் என்றாலும். சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்க்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.